முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (24.12.2024) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டத்தின் காப்பீட்டுத் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் (பொ) முனைவர்.பா.செந்தில்குமார், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவப் பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக சார்பில் ஆவடியில் உள்ள அவரது சிலைக்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மலர்தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஆவடி மாநகர மேயர் உதயகுமார் ,ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், ஜி.ராஜேந்திரன், பொன் விஜயன் மற்றும் பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

த.மு.எ.க.ச. மூத்த தலைவர் பேராசிரியர் அருணன் - நெல்லை ஜெயந்தா உள்ளிட்டோருக்கு

கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருது!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, டிச. 25- த.மு.எ.க.ச. மூத்த தலைவர் பேரா.அருணனுக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

48 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் டிச.27ஆம் தேதி தொடங்குகிறது. புத்தகக் காட்சியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொள்கிறார்.

இந்த தொடக்கவிழாவில் துணை முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் பொற்கிழி விருதுகளையும், தென்னிந்திய புத்தகப் பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் (பபாசி) வழங்கும் விருதுகளையும் வழங்க உள்ளார்.

இது தொடர்பாக திங்களன்று (டிச.23) செய்தியாளர் சந்திப்பில் பபாசி தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் எஸ்.கே.முருகன், பொருளாளர் சுரேஷ் ஆகியோர் கூறியதாவது:-

900 அரங்குகளுடன் கூடிய புத்தகக்காட்சி டிச.27ஆம் தேதி தொடங்கி ஜன.12ந் தேதி வரை நடைபெற உள்ளது.

விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும், வேலை நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறும். புத்தகங்களுக்கு 10 விழுக்காடு கழிவு வழங்கப்படும். நுழைவுக் கட்டணமாக 10 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புத்தகக் காட்சியையொட்டி பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஓவியம், பேச்சுப் போட்டிகள் நடைபெறுகிறது.

ஆண்டுதோறும் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி விருது வழங்கப்படுகிறது. அதன்படி பேரா.அருணன் (உரைநடை), நெல்லை ஜெயந்தா (கவிதை), சுரேஷ் குமார் இந்திரஜித் (நாவல்), என். ஸ்ரீராம் (சிறுகதைகள்), கலைராணி (நாடகம்), நிர்மால்யா (மொழிபெயர்ப்பு) ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

சிறந்த பதிப்பாளர் விருது!

சிறந்த பதிப்பாளருக்கான பதிப்பகச் செம்மல் க.கணபதி விருது கற்பகம் புத்தகாலயத்திற்கும், சிறந்த நூல கருக்கான விருது டாக்டர் ஆர். கோதண்டராமனுக்கும், சிறந்த புத்தக விற்பனையாளருக்கான பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் விருது பெல்கோ நிறுவனத்திற்கும், சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா விருது எழுத்தாளர் ஜோதி சுந்த ரேசனுக்கும் வழங்கப்படுகிறது.

சிறந்த தமிழறிஞருக்கான பாரி செல்லப்பனார் விருது முனைவர் சபா.அருணாச்சலத்திற்கும், சிறந்த பெண் எழுத்தாளருக்கான முதல் பெண் பதிப்பாளர் அம்சவேணி பெரியண்ணன் விருது பேரா. பர்வீன் சுல்தானாவிற்கும், சிறந்த சிறுவர் அறிவியல் நூலுக்கான நெல்லை சு.முத்து விருது எழுத்தாளர் சங்கர சரவணனுக்கும், முத்தமிழ்க் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் கவிதை இலக்கிய விருது மணவை பொன்.மாணிக்கத்திற்கும், சிறந்த தன்னம்பிக்கை நூலுக்கான சிந்தனைக் கவிஞர் கவிதாசன் விருது மரபின் மைந்தன் முத்தையாவுக்கும் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி 199வது வட்டத்தின் சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு உதயநிதி உதய நாள் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி வட்ட செயலாளர் மாமன்ற உறுப்பினர் ஜி.சங்கர் தலைமையிலும் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ முன்னிலையில் கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி இளம் பேச்சாளர் வெ .ஆர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றினர். உடன் மாவட்ட துணை செயலாளர்கள் மு.மனோகரன், ஒன்றிய கழக செயலாளர் ஜி.வெங்கடேசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எம் கே ஏழுமலைத..பவீர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.அருண்குமார், எம். பார்த்திபன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜே.இ.பாண்டியன், பகுதி கழக நிர்வாகிகள் வீ.தனசேகரன், வே.வி.குமரேசன், கே.டி.ரவி, மாமன்ற உறுப்பினர்கள் வ.பாபு எம்.சி, அ.முருகேசன் எம்.சி. ,வட்டக் கழக செயலாளர் ஆர்.நாகராஜ், எப்.ஆரோன், பா.தேவகுமார், மாவட்ட பிரதிநிதிகள் க.ஏழுமலை, எஸ்.தயாளன், ஆர்.சுரேஷ்பாபு ,பகுதி கழக ,வட்டக் கழக, மாவட்ட ,பகுதி, வட்ட, அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் நங்கநல்லூர் எம்ஜிஆர் ரோட்டில் அமைந்துள்ள திருவுருவ சிலைக்கு ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளரும் 12வதுமண்டலகுழுதலைவர் என்.சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.மற்றும் பொதுக்குழு எம்.எஸ்.கே.இப்ராகிம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர். ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், பகுதி நிர்வாகிகள் ஏ.சாலவன் எம்.சி, ஜி.சுந்தரராஜன், ஆர்.பாபு,வட்டக் கழக செயலாளர் ஜெ.நடராஜன், இ. உலகநாதன், டி.ஜேசுதாஸ், கே.ஆர் ஜெகதீஸ்வரன் ஏ.வேலவன்,ஏ. ஆர். சரவணா, மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள், கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்.

முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரிந்த

திருவண்ணாமலை என்.கண்ணன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!

கழகத்தினர் - உறவினர் - நண்பர்கள் அஞ்சலி!

திருவண்ணாமலை, டிச. 25 - முரசொலி அலுவலக விநியோகப் பிரிவில் பணியாற்றிய திருவண்ணாமலை என்.கண்ணன் கடந்த ஆண்டு (25.12.2023) அன்று உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

அதனையொட்டி அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (25.12.2024 புதன்கிழமை) அன்னாரின் இல்லம், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அருகில் உள்ள தென் பள்ளிப்பட்டு கிராமத்தில் உள்ள இல்லத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்படுகிறது.

இதில் கழக நிர்வாகிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என பலர் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்துகின்றனர்.

தந்தை பெரியாரின் 51 வது நினைவு தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக துணை செயலாளரும் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினருமான க.செல்வம் பெரியாரின் திருவுரு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநகரக் கழக செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி மகாலட்சுமி, ஒன்றிய செயலாளர் பி. எம். குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்

துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மற்றும் மயிலை மேற்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி அவர்களின் வழிகாட்டுதலில் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன், மாவட்ட துணை அமைப்பாளர் இரா.சதா சிவம், பகுதி அமைப்பாளர் அறிவுமணி ஏற்பாட்டில் 121 அ வட்டம் லயொட்ஸ் ரோடு சந்திப்பில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது, வட்ட செயலாளர் சி கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி அவைத்தலைவர் ஜி.ராஜேந்திரன், பகுதி பொருளாளர் ஜி.முருகையன், வட்ட செயலாளர் ஏழுமலை, சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி தலைவர் ச.தேவராசு, துணை தலைவர் எஸ் பாலகிருஷ்ணன், பொறியாளர் அணி அமைப்பாளர் இரா சக்ரவர்த்தி இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளராகள் அமைப்பாளர்கள் அயன் ரமேஷ் , எம்.ஏ.எஸ்.செந்தில் குமார், ர.வரதராஜன், மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் க.கணபதி, மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி தலைவர் பி.எஸ்.ஆறுமுகம், மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் சு.மோகன், ராம் பாபு, பிரபாகரன்.எல், திருவேங்கடம், எஸ்.ராஜேந்திரன், இந்திரகுமார், கந்தசாமி, பி.ஏழுமலை, ஏ.ராஜேஷ், அணு, ராயர், CRPK சுரேஷ், டி.ஜ.முனிவேல், தணிகாசலம், ஸ்ரீனிவாசன் மற்றும் 121 அ வட்ட நிர்வாகிகள் எஸ்.கணேசன், பி.இளவரசு எஸ்.பலராமன், சி.ரமேஷ், எஸ்.லோகநாதன், பி.முனிசாமி சே.ஜெயசீலன், சுதாகர் ராவ், தா.மோகன், எம்.ராஜ்குமார், பாக்சர் ரவி கோவிந்தன், முகமத் சுலைமான், இரா.சங்கர், கே.செல்வராஜ், அன்சார் பாட்ஸா, வே சுந்தர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முகச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு

தமிழ்நாடு முதலமைச்சர் முயற்சியால் குணமடைந்துள்ள சிறுமி தானியாவிற்கு கிறிஸ்துமஸ் பரிசு!

அமைச்சர் ஆவடி சாமு நாசர் வழங்கி வாழ்த்து கூறினார்!

திருவள்ளூர் டிச 25; திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வீராபுரம் பகுதியை சேர்ந்த ஸ்ரீபன்ராஜ், சௌபாக்கியம் தம்பதியின் 9 வயது சிறுமி டான்யா, அரிய வகை முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு. தமக்கு உதவிக்கரம் நீட்டு மாறு அரசுக்கு அச்சிறுமி கோரிக்கை விடுத்திருந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடனடியாக சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார். இந்நிலையில் சவிதா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இலவசமாக சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பல்வேறுகட்ட மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டு சிறுமி டான்யாவுக்கு அறுவை சிகிச்சை நடத்தப் பட்டது. 10 பேர் கொண்ட மருத்துவர்கள் குழு 8 மணி நேர தொடர் அளித்து சிறுமி யின் முகத்தை சீரமைத்தது. நாட்டிலேயே முதல்முறையாக 9 வயது சிறுமிக்கு மேற் கொள்ளப்பட்ட முகக்சீரமைப்பு அறுவை சிகிச்சையாகவும் இது அமைந்தது. இதனையடுத்து முதலமைச்சர் மருத்துவமனைக்கு சென்று சிறுமியிடம் நலம் விசாரித்ததுடன் நம்பிக்கை அளித்தார்

இந்நிலையில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகைகளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுன்படி சிறுமி டானியாவிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் ஆவடியில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் வரவேற்று சிறுமிக்கு கிறிஸ்துமஸ்மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறி சிறப்பு பரிசுகள் வழங்கினார் அப்போது சிறுமி டானிய தெரிவித்தது

என் வாழ்க்கையை மாற்றிக் காட்டி மீண்டும் என் தோற்றத்தை உருவாக்கி தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு காலம் முழுவதும் அவருக்கு நன்றி கடனாக இருப்பேன்

முதலமைச்சராக சொன்னபடி நான் நன்றாக படிப்பேன்

நான் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் மேற்கொண்டு இருந்த நாட்களில் இருந்து இன்று குணமடைந்து வரை என்னை தினந்தோறும் நல விசாரித்து

பண்டிகை நாட்களின் போது என்னை நேரில் அழைத்து புதிய சீருடைகள் தந்து வாழ்த்துக்கள் கூறும் அமைச்சர் நாசர் அண்ணா அவர்களுக்குநன்றி தெரிவித்தனர்.

ஏ.பி.பாபு தலைமை! மாறன் கே.எஸ்.குமார் - இரா.வினோத் - பாலாஜி முன்னிலை!

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியத்தில் தந்தை பெரியார் நினைவு நாள்!

ஒன்றியச் செயலாளர் அ.ம.துரைவீரமணி மலர் தூவி மரியாதை செலுத்தினார்!

சென்னை, டிச. 25 சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியத்தில் தந்தை பெரியாரின் 51 வது நினைவு நாளை போற்றும் விதமாக கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக் கிணங்க, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியம், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் 8 வது கிளைச் செயலாளர் ஏ.பி.பாபு தலைமையில் மாவட்ட பிரதிநிதி மாறன் கே.எஸ்.குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா.வினோத், 9 வது வார்டு கிளைச் செயலாளர் பாலாஜி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் 8 வது வார்டு பகுதியில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

உடன் பா.சிவசங்கர், ஐசக் நேசகுமார், ஏ.எஸ்.மூர்த்தி, செண்பகவல்லி, ஷர்மிளா, தேன்மொழி, செல்லத்துரை, ஏ.பி.ஆர்.வேலாயுதம், ஸ்ரீதர், நந்தகோபால், இ.வெங்கடேசன், ஆர்.மனோகரன், மாரிமுத்து, குமார், ராஜராஜன், ஜெ.வெங்கடேசன், டில்லி மோகன், ராபர்ட், கண்ணன், விஜயலட்சுமி, கலைவாணி, சங்கீதா, கிளாரா, பூமாலை, மாமலை வாசன், கணேசன், கிருஷ்ண பிரியா, சசிகலா, வடிவுக்கரசி, பிரேமா, நளினி, உமா, திவ்யா மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஈரோடு செ. அரங்கராசன்

டிசம்பர் 25 (2002)

ஈரோடு நகரக் கழகச் செயலாளராக மூன்று முறை சிறப்பாகப் பணியாற்றினார்.

ஈரோடு நகர்மன்ற உறுப்பினராக இருமுறையும், பின்னர் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர்மன்றத் தலைவராகவும் இருந்தபோது நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்தார்.

விலைவாசி; இந்தி எதிர்ப்பு; இலங்கை தமிழர் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கு. காசிநாதன்

டிசம்பர் 25 (1991)

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை இளமைக் காலம் முதல் தனது இறுதிக் காலம் வரை கடைபிடித்து வந்தவர்.

கழகம் துவங்கிய காலத்திலேயே கொடுங்கையூர் பகுதியில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

கிளைச் செயலாளராகவும், புழல் ஒன்றிய அவைத் தலைவராகவும், பின்னர் கொடுங்கையூர் சென்னை மாநகராட்சிக்குள் இணைந்த போது பெரம்பூர் 1வது வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.